செ.வெ.எண்: 57 / மார்ச் / 2019 நாள்:21:03.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (Polling Personnel) - பணி ஒதுக்கீடு தெரிவு - திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று(21.03.2019) நடைபெற்றது.**

-------------

நடைபெறவுள்ள 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 9 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 2533 வாக்குசாவடி மையங்களுக்கும் வாக்குப்பதிவு தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்-1, வாக்குப்பதிவு அலுவலர்-2, வாக்குப்பதிவு அலுவலர்-3 மற்றும் வாக்காளர்கள் எண்ணிக்கை 1200 மற்றும் அதற்கு மேல் உள்ள வாக்குப்பதிவு மையங்களில் வாக்குப்பதிவு அலுவலர்-4 ஆகியோருக்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட கணினி மென்பொருள் மூலம் முதல் குலுக்கல் முறையில் (First Randomization) திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பணி ஒதுக்கீடு தெரிவு இன்று 21.03.2019 மாலை 7.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தேர்தல் பிரிவு கணினி அறையில் நடைபெற்றது.

பணி ஒதுக்கீடு தெரிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு அலுவலர்கள் அனைவருக்கும் துறைவாரியாக/வருவாய்த்துறை அலுவலர்கள் மூலமாகவும் மற்றும் கைபேசி குறுஞ்செய்தி (SMS) ஆகிய வழிகள் மூலமாகவும் பணி ஆணை வழங்கப்பட்டு எதிர்வரும் 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தற்போது பணிபுரிந்து வரும் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளி/கல்லூரி வளாகத்தில் அனைத்து வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான முதல் பயிற்சி வகுப்பு நடைபெறும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்

**செய்தி வெளியீடு:**

21/3/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**